பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 38

வெள்ளிக்கிழமை
03 ஜனவரி 2025

மார்கழி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

யாழ்ப்பாணத்தில் டெங்கு தீவிரம்! » 06

படகுத்தளம் சீரமைக்க இந்தியாவால் நிதியுதவிகள் » 05

நெல்லுக்கு விரைவில் உத்தரவாதம் » 02

## 2 வருடங்களின் முன் இறந்தவரின் சடலம் இன்று தோண்டியெடுப்பு!

### வழக்கில் தொடர்புடையவர் என்பதால் நீதிமன்றம் உத்தரவு

மன்னார், ஜன. 3
இரண்டு வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்தவரின் சடலத்தை மீளத் தோண்டியெடுத்து உடற்கூற்றுப் பரிசோதனை நடத்துமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
ஜேசுதாசன் ரஞ்சித்குமார் (வயது-40) என்ற மேற்படி நபர் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் மன்னார் - இலுப்பைக் கடவைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்துள்ளார். இதன் பின்னர் நவாலிப் பகுதியில் வசித்துவந்த அவர் யாழ்ப்பா

☞ 11

## எலிக்காய்ச்சலால் இருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 3
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் எலிக் காய்ச்சலுக்குச் சிகிச்சை பெற்றுவந்த இருவர் நேற்று உயிரிழந்துள்ளனர்.

☞ 11



## இரு இளைஞர்களின் உயிரை காவுகொண்டது பாலம்!

### புளியம்பொக்கணையில் துயரம்!

கிளிநொச்சி, ஜன. 3
பரந்தன் - முல்லைத்தீவு பிரதான வீதியில், புளியம்பொக்கணைச் சந்திப் பகுதியில் நீண்டகாலமாக நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுவரும் பாலத்துக்குள்

☞ 11

வன்னியில் நிலவும்

## ஆசிரிய வெற்றிடங்களுக்கு மூன்றே மாதங்களில் தீர்வு!

### வடமாகாணப் பிரதிப் பிரதமசெயலாளர் தெரிவிப்பு

வவுனியா, ஜன. 3
முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்கு வெறும் மூன்று மாதங்களில் தீர்வு வழங்கப்படும் என்று வடமாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் தெரிவித்துள்ளார்.

☞ 11

## ஆசிரிய வெற்றிடங்கள் வன்னியில் அதியுச்சம்

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் ரவிகரன் எம்.பி. காட்டம்!

வவுனியா, ஜன. 3
வன்னிப் பிராந்தியப் பாடசாலைகளில் ஆசிரிய வெற்றிடங்கள் மிகவும் அதிகரித்துள்ளன. அவை உடனடியாக நிரப்பப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

☞ 11

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன. 3
சாவகச்சேரி - கல்வயல் கிராம்புவில் பகுதியில் வயல் கிணற்றிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.
குறித்த சடலம் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில்

☞ 11

அரச அதிகாரிகள் மீது

## ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள்: பொலிஸாரிடம் முறைப்பாடு!

யாழ்ப்பாணம், ஜன. 3
நகர அபிவிருத்தி அதிகாரசபையினர் மற்றும் அதிகாரிகள் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உதவிப் பணிப்

☞ 11



யாழ். நகரப் பகுதியில் புத்தாண்டின்போது

## அடாவடியில் ஈடுபட்ட வன்முறைக்குழு கைது

யாழ்ப்பாணம், ஜன. 3
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் புத்தாண்டு தினத்தன்று அடாவடித் தனத்தில் ஈடுபட்ட வன்முறைக்குழு கைதுசெய்யப்பட்டுள்ளது. அந்தக் குழுவிடம் இருந்து இரண்டு ஓட்டோக்களும் மீட்கப்பட்டுள்ளன.
புத்தாண்டு தினத்தன்று அதிகாலை வேளையில் அந்தக் குழு இளைஞர் இருவரை கொடூரமாகத் தாக்

☞ 11

யாழ்ப்பாணத்தில்

## காற்று மாசு கட்டுக்குள்!

யாழ்ப்பாணம், ஜன. 3
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக காற்றுமாசு உயர்வடைந்திருந்த நிலையில், அது தற்போது கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது என்று மத்திய சுற்றாடல் அதிகாரசபை

☞ 11

## வவுனியாவில் கத்திக்குத்து ஒருவருக்குப் படுகாயம்

வவுனியா, ஜன. 3
வவுனியா, இலுப்பையடிச் சந்தியில் புத்தாண்டு தினத்தில் இடம்பெற்ற கத்திக்குத்துத் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

☞ 11

கிளிநொச்சி விபத்து;

## படுகாயமடைந்த பெண் நேற்று உயிரிழப்பு!

கிளிநொச்சி, ஜன. 3
கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனைக்கு முன்பாக, கடந்த 24ஆம் திகதி இடம்பெற்ற டிப்பர் விபத்தில் படுகாயமடைந்த பெண் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார்.
இந்த விபத்தில் கஜன் அபிவர்ணி (வயது-2) என்ற பாலகி அன்றைய தினமே

☞ 11



இனிமேல்

## ஜனாதிபதி, பிரதமருக்கே 'எஸ்.ரி.எப்.' பாதுகாப்பு

கொழும்பு, ஜன. 3
இலங்கையில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மட்டுமே இனிவரும் நாள்களில் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பு வழங்கப்படும் என்று பாதுகாப்புத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
2009 ஆம் ஆண்டு இறுதிப்போரின் போதும், அதற்குப் பின்னரும் அமைச்சர்கள் பலருக்கு விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பு

☞ 11



முச்சந்தி முரளி

'இதுக்காவது சொன்ன காலத்துக்குள்ள தீர்வு தருவினமோ இல்லாட்டி இழுத்தடிக்கத்தானோ மூண்டுமாத அவகாசம்?'

மக்கள் மனச்சாட்சியாக ஒலிக்கும் தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூசு தட்டப்படும் விசாரணை; சிக்கலில் அரசியல்வாதிகள்

கொழும்பு, ஜன.3

**பல்வேறு ஊழல் மோசடிகளுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் கைதுசெய்யப்படவுள்ளனர் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிப்பதாக கொழும்பிலிருந்து வெளியாகும் பிரதான சிங்கள நாளிதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

கைதுசெய்யப்படவுள்ள பிரபல ஐந்து அரசியல்வாதிகளுள் வெளிநாட்டு வேலைக்காக அனுப்புவதாகக் கூறி பொதுமக்களிடம் பணத்தை மோசடி செய்ததாகக் கூறப்படும் அரசியல்வாதியொருவரும், ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும், சுற்றுலா சபையின் முறைகேடுகளில் ஈடுபட்ட அதிகாரிகள் சிலரும் உள்ளடங்குவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, நாட்டின் தேசிய சொத்தைக் கொள்ளையடித்த வழக்குகளில் தொடர்புடைய 10க்கும் மேற்பட்ட பிரபல அதிகாரிகள் மற்றும் பிணைமுறி மோசடியில் குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு குழுவினருக்கும் எதிராகவும் குற்றப்புலனாய்வு திணைக்களமும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவும் உடனடியாக வழக்குத் தொடரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்படவுள்ளோர் தொடர்பில் மைத்திரி - ரணில் அரசாங்கத்தின் காலப்பகுதியில் வெவ்வேறு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டாலும், சரியான சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த அனைத்து விசாரணைகளையும் சரியான முறையில் நடத்திய பின்னர் அனைத்துச் சந்தேகநபர்களுக்கு எதிராகவும் விரைவான மற்றும் முறையான ரீதியில் சட்டத்தை தற்போதைய அரசாங்கம் நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# ரணில், தினேஸிடம் வாக்குமூலங்கள்

கொழும்பு, ஜன.3

சர்ச்சைக்குரிய மருந்துக் கொள்வனவுக்காக முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் பிரதமர் தினேஸ் குணவர்த்தன ஆகியோரிடம் வாக்குமூலங்களைப் பதிவுசெய்வதற்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

தற்போது, இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதன் பின்னர் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படவுள்ளதாகவும் அதன்பின்னர், முன்னாள் பிரதமர் தினேஸ் குணவர்த்தனவிடமும் வாக்குமூலம் பதிவுசெய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



# இனப்பிரச்சினையையும் தூய்மைப்படுத்தவேண்டும்

*சிறீதரன் எம்.பி. வலியுறுத்து*

யாழ்ப்பாணம், ஜன.3

இந்த அரசு 'க்ளீன் சிறீலங்கா' போன்று இனப்பிரச்சினையையும் 'க்ளீன்' செய்யவேண்டும். அதன்போதே புலம்பெயர் தமிழர்களின் நிதியில் வடக்கு- கிழக்கைப் புதிய அபிவிருத்தியின் பாதைக்கு இட்டுச்செல்லலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக நாடுகள் மற்றும் நாணயநிதியத்திடம் இலங்கை வாங்கிய கடனை கட்டுவதென்றால் உடனடி வழிமுறைகள் இல்லை. நெல் உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கையின் கைத்தொழில் துறையும் எதிர்பார்த்த இலாபத்தை அடையவில்லை.

அந்தவகையில் இலங்கை அரசாங்கம் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கும் 'க்ளீன்' திட்டத்தைக் கொண்டுவருவார்களாக இருந்தால் புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழர்களின் நிதியுடன் வடக்கு - கிழக்கில் புதிய அபிவிருத்தியை உருவாக்கலாம். இதற்காகப் பேசுவதற்கு எங்களுடைய சமாதானக் கதவுகள் எப்பொழுதும் திறந்திருக்கும் - என்றார். (ச-27,113)

# நெல்லுக்கு விரைவில் உத்தரவாத விலை

கொழும்பு, ஜன.3

எதிர்வரும் நாள்களில் நெல்லுக்கான புதிய உத்தரவாத விலை அறிவிக்கப்படவுள்ளதாக விவசாயம் மற்றும் கால்நடை வளத்துறை பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அடுத்த பெரும்போகம் ஆரம்பமாவதற்கு முன்னர், உர நிவாரணம் வழங்கப்படாத விவசாயிகளுக்கு உரமானியத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதனை இந்த வாரத்துக்குள் பெற்றுகொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# கதிரைச் சின்னத்தில் களமிறங்கும் சு.க.

கொழும்பு, ஜன.3

உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைத் தேர்தல்கள் உட்பட எதிர்வரும் தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 'கதிரை' சின்னத்தில் போட்டியிடும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பல்வேறு முரண்பாடுகளை சுமூகமாகத் தீர்த்து கட்சியைப் பலப்படுத்தும் வகையில் புதிய பயணத்தை புத்தாண்டில் ஆரம்பிக்கவுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# பொருளாதார நெருக்கடி இன்னமும் நீங்கவில்லை

*வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஜன.3

நாட்டின் பொருளாதாரம் இன்னமும் மிகவும் நெருக்கடியான நிலையிலேயே காணப்படுகிறது. இதிலிருந்து மீண்டுவர சில இக்கட்டான முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சின் அதிகாரிகளிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

வீழ்ந்த இடத்தில் நாட்டை மீட்க அனைவரும் உறுதியுடன் இருக்கவேண்டும். குடும்பமாக உழைக்கும் போது குடும்ப முன்னேற்றத்துக்காகச் சில முடிவுகளை எடுக்கவேண்டும். அவ்வாறுதான் நாட்டுக்காக சில முடிவுகளை எடுக்கவேண்டியுள்ளது.

ஆனால், அந்த முடிவுகள் குடும்ப நலனுக்கானவை போன்று இவை நாட்டு நலனுக்காக எடுக்கப்பட வேண்டும். இதனை அனைவரும் புரிந்துகொள்வார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



# பாடசாலை உபகரணங்கள் 20 வீதம் விலை குறைப்பு

கொழும்பு, ஜன.3



டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வருவதால் அப்பியாசக் கொப்பிகள் உள்ளிட்ட பாடசாலை உபகரணங்களின் விலை 20 வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிறுகைத்தொழில் சங்கம் தெரிவித்துள்ளது. காகிதங்களுக்கு 18 சதவீத வற் மற்றும் 2.5 சதவீத சமூக பாதுகாப்பு வரி இருப்பதாகவும், இந்த இரண்டு வரிகளையும் நீக்கினால், பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்களின் விலையை மேலும் குறைக்க முடியும் என்றும் சங்கத்தின் தலைவர் நிருக்ஷ குமார தெரிவித்தார். (ச-இ)

# உப்பு இறக்குமதி அவசியமில்லை

கொழும்பு, ஜன.3

நாட்டில் போதியளவு உப்பு கையிருப்பில் உண்டு எனவும் இறக்குமதி செய்ய வேண்டியதில்லை எனவும் இலங்கை உப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் நிசாந்த சந்தபரண தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய உப்பளங்களில் உப்பு உற்பத்தி தாராளமாக செய்யப்படுகின்றது. உணவுக்காகப் பயன்படுத்தும் உப்புக்குத் தட்டுப்பாடு இருக்காது. கைத்தொழில் தேவைகளுக்காகப் பயன்படுத்தக் கூடிய உப்பு வகைகளுக்கே தட்டுப்பாடு ஏற்படும். சரியான திட்டங்களை வகுத்தால் உப்பை ஏற்றுமதி செய்யமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சித் தேர்தல்

# திருத்தச் சட்டவரைவு இம்மாதம் சமர்ப்பிப்பு

**கொழும்பு, ஜன.3**

**உள்ளூராட்சிமன்றத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு இன்னும் இரண்டு வாரங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்தச் சட்டவரைவு வர்த்தமானிக்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.**

இரண்டு வருடங்களுக்கு முன்னர் தேர்தலுக்கு முன்மொழியப்பட்ட வேட்பாளர்களில் சிலர் உயிரிழந்துள்ளதுடன் சிலர் நாட்டை விட்டு வெளியேறியும் உள்ளனர். இந்த நிலையில் 2023 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காகக் கோரப்பட்ட வேட்புமனுக்களை மீளப்பெறுவதற்கு இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதிய வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற்கு வாய்ப்பளிக்கும் முக்கிய நோக்கத்துடன் இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கட்சித் தலைவர்களின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சரவை அண்மையில் தீர்மானித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)




## முல்லைத்தீவில் விபத்துகள்
### இருவர் படுகாயம்

கொழும்பு, ஜன.3

புத்தாண்டு நாளான நேற்றுமுன்தினம் இரவு முல்லைத்தீவு மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேசங்களில் இடம்பெற்ற விபத்துகளில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு உடுப்புக்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் அதிவேகம் காரணமாக விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மாடு ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்துள்ளார். விபத்துகள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-19)

## 20,000 மெற்றிக் தொன் வெங்காயம் இறக்குமதி

கொழும்பு, ஜன.3



வெங்காயத்தை இறக்குமதி செய்யும் அரசாங்கத்தின் தீர்மானத்தின்படி 20 ஆயிரம் மெற்றிக் தொன் வெங்காயத்தை முதற்கட்டமாக இறக்குமதி செய்வதற்குத் தீர்மானித்துள்ளதாக இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. தற்போது, சந்தையில் வெங்காயத்துக்கான தட்டுப்பாடு அதிகரித்துள்ள காரணத்தால் இந்த மாதம் 31 ஆம் திகதிக்குள் 30 ஆயிரம் மெற்றிக் தொன் வெங்காயத்தை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அண்மையில் தீர்மானித்துள்ளது என்றும் அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரவீந்ர பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். (ச-இ)



## 23 கிலோ கஞ்சாவுடன் இருவர் பளையில் கைது

பளை - தம்பகாமம் பகுதியில் பெருமளவான கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

இராணுவப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றது.

இதன்போது சந்தேகநபர்களிடமிருந்து 23 கிலோ 165 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் இருவரும் சான்றுப்பொருள்களுடன் பளைப் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-27-20)

## இந்திய மீனவர் சென்னைக்கு

கொழும்பு, ஜன.3

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி மீன் பிடித்த குற்றச்சாட்டின் கீழ் தடுத்துவைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட 20 மீனவர்கள் சென்னைக்கு விமானம் மூலம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சென்றடைந்தனர்.

ஒரு வருடத்துக்கு முன்பு கைதுசெய்யப்பட்ட புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி பகுதிகளைச் சேர்ந்த இவர்களுக்குப் பிரயாணம் செய்வதற்குத் தற்காலிகக் குடியுரிமைச் சான்றிதழ்களை இந்தியத் தூதரகம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-45-6)

## சுற்றுலாவிகளின் வருகையை அதிகரிக்கப் புதிய திட்டம்

கொழும்பு, ஜன.3

இந்த வருடம் நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 3 மில்லியனாக அதிகரிப்பதற்கான புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சுற்றுலாத்துறைப் பிரதி அமைச்சர் ருவன் சமிந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் அதிக எண்ணிக்கையிலான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவான மாதமாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ச-இ)




**வ**ருசப்பிறப்பே யாழ்ப்பாணத்துக்கு ரணகளமாத்தான் துடங்கியிருக்கு. யாழ்ப்பாணம் பஸ் ஸ்ராண்டுக்கு பின்பக்கமா, மினிபஸ்ஸுகள் நிக்கிற இடத்தடியில இரவுநேரத்தில பெடியள் வாறதும், பிளேன்ரீ குடிச்சபடி வம்பளக்கிறதும் வழமை. விடிய விடிய அந்த இடம் மட்டும் முழிப்பா இருக்கும். அப்பிடி நிக்கேக்க பெடியளுக்குள்ள கொழுவலும் வாறது. அப்பிடித்தான் வருசப்பிறப்பெண்டு அந்த றோட்டில பாட்டுப் போட்டு நல்ல 'மப்பில' பெடியள் செற் ஒண்டு ஆடிக்கொண்டிருந்தது. அந்தக் கும்பலில ஓட்டோ ஓடுறவையும் இருந்திருக்கினம். அவையள் ஒற்றைச் சில்லில ஓட்டோ எல்லாம் ஓடிக்காட்டி நல்லபடியாத் தான் போய்க்கொண்டிருந்தது. திடீரெண்டு றோட்டால போனவையோட ஏதோவொரு தனகுப்பாடு வந்திட்டுது. அவங்களும் ஏதோ திருப்பிக் கதைக்க, அப்பிடியே அவங்களை ஹெல்மெட்டோட கொண்டந்து, ஜீன்ஸையும் ஹெல்மெட்டையும் நடுறோட்டில கழட்டிப்போட்டு, கையில கிடைச்ச தடி, பொல்லு, ஹெல்மெட் எண்டதுகளால அவையளில ஒராள ஈவிரக்கமில்லாம அந்தக் கும்பல் அடிச்சிருக்கு. ஆக்கள் ஆடுறதை வீடியோ எடுத்துக்கொண்டிருந்த ஒராளின்ர போனில இந்தச் சண்டித்தனம் சிக்கினதாலதான் விசயமே வெளியில வந்திருக்கு. இந்த மப்புக்கும்பலிட்ட தலை, முகம் எல்லாம் அடிவாங்கின ஆள் சீரியஸான நிலையில இருக்கிறாராம். இப்ப அந்தச் சண்டித்தனக் கும்பலை பொலிஸ் தேடித் திரிஞ்சு நாலு பேரைப் பிடிச்சிருக்கினமாம்.

குதிரையள் ஓடிப்போன பிறகு லாயத்தை மூடுற மாதிரி எல்லாம் நடந்து ஓய்ஞ்ச பிறகுதான் உந்தப் பொலிஸ்காரர் குற்றவாளியளைத் தேடிப்பிடிப்பினம். சிலவேளை குற்றவாளியள் அம்பிடாட்டி அந்தக் கேஸ் அப்பிடியே இழுபட வேண்டியதுதான். உண்மையில, உந்த அடிபாட்டில பொலிஸ்காரருக்கும் பொறுப்பிருக்கு. எப்பவுமே பெடியள் 'பஜார்'அடிக்கிற இடத்தில, வருசம் பிறக்கேக்க நல்ல கணகணப்பில தான் நிப்பாங்கள் எண்டும், அதால இப்பிடி ஏடாகூடமா ஏதும் நடக்குமெண்டும் பொலிஸ்காரருக்கு தெரியும். அப்ப என்ன செய்திருக்கோணும்? பெடியளை இப்பிடி நடுறோட்டில நிண்டு அண்டைக்கு ஆடவிடாமல் கலைச்சிருக்கோணும். சரி, வருசப்பிறப்புத்தானே, ஒருநாள் ஆடிப்போட்டு போகட்டும் எண்டு நினைச்சிருந்தால் அதில ரண்டு பொலிஸ்காரரை நிப்பாட்டி வைச்சிருந்திருக்கோணும். ஆனால் மணித்தியாலக்கணக்கா இப்பிடிக் கும்பலா நிண்டு பெடியளைக் கூத்தடிக்க விட்டிட்டு பொலிஸ்காரர் அங்க எட்டியும் பாக்கேலை. அப்ப மப்பில நிண்ட மாணிக்கங்கள் எல்லாம் பாட்ஷாவா மாறி இப்பிடி பாய்ஞ்சடிச்சு போற வாறவையோட உறண்டை இழுத்து, சண்டை பிடிப்பினம் தானே.

கைக்கெட்டுற தூரத்தில இருக்கிற பஸ் ஸ்ராண்டில இவ்வளவு பெரிய பிரச்சினை நடந்தும், அடுத்த நாள் தான் பொலிஸுக்கு விசயமே தெரியுமாம். அந்தளவுக்கு இருக்கு அவையின்ர காவல் காக்கிற சீத்துவம். எத்தினை திசைகாட்டியள் ஆட்சிக்கு வந்தாலும், உந்தப் பொலிஸ்காரர் தாங்கள் நினைச்சபாட்டிலதான் குறுக்க மறுக்க நடப்பினம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** உற்சாகமான நாளாக இருக்கும். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்வார்கள். சிஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.



**இடபம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். சிலருக்கு எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாயின் விருப்பத்தை பூர்த்தி செய்வீர்கள்.



**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும் அவசியமான செலவு களாகவே இருக்கும். சிலருக்கு விருந்து விசேடங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உண்டாகும்.



**கடகம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். இளைய சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.



**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.



**கன்னி:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும்.



**துலாம்:** எதிலும் நிதானமாக செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.



**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவி னர்கள் வருகையால் செலவுகள் ஏற்படும். ஆனாலும், உற்சாகத்துக்குக் குறைவிருக்காது.



**தனுசு:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவையை நிறை வேற்றி மகிழும் வாய்ப்பு உண்டாகும். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.



**மகரம்:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். முடிந்தவரை அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்.



**கும்பம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக் கூடும்.



**மீனம்:** தாய்வழி உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும் பத்தில் உங்கள் யோச னைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு சுமாராகத்தான் இருக்கும்.

# 2024ஆம் ஆண்டின் சிறந்த வங்கியாக இலங்கை வங்கி!

இலங்கையின் முதன்மையான நிதி நிறுவனமான இலங்கை வங்கி ஐக்கிய இராச்சியத்தின் 'பைனான்சியல் ரைம்ஸ்' குழுமத்தின் முக்கிய வெளியீடான 'த பாங்கர்' சஞ்சிகையின் '2024ஆம் ஆண்டின் இலங்கையின் சிறந்த வங்கி' என்ற மதிப்புமிக்க கௌரவத்தைப் பெற்றுள்ளது. 2021 மற்றும் 2023ஆண்டுகளைத் தொடர்ந்து 2024ஆம் அண்டிலும் இவ்விருதைப் பெற்றிருப்பது வங்கியின் தொடர்ச்சியான வங்கிச்சேவையின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது. இந்த வகையில் 2024 இன் உலகின் சிறந்த 1000 வங்கிகள் பட்டியலில் இடம்பிடித்த ஒரே இலங்கை வங்கி என்ற பெருமையையும் இலங்கை வங்கி பெற்றுள்ளது.

'த பாங்கர்' சஞ்சிகையின் கடுமையான மதிப்பீட்டு செயன்முறையின் பின்னரே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்விருதானது உறுதியான ஐந்தொகையைப் பராமரித்து, சேவைத் தரத்தை மேம்படுத்தி, தொழில்நுட்பத்தில் முதலீடு செய்து, உள்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கும் வங்கியின் ஏறுமுகத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது. 2024 ஆம் ஆண்டிற்கான இவ்விருது தேர்வில் 127 நாடுகள் உள்வாங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலகளாவிய பொருளாதார சவால்களையும் உள்நாட்டு நிதி நெருக்கடிகளையும் எதிர்கொண்டு இலங்கை வங்கி இச்சாதனையை நிகழ்த்தியுள்ளது. வங்கியின் மூலோபாய முயற்சிகள் மற்றும் விவேகமான நிதி முகாமைத்துவம் ஆகியவை நிலையான செயற்திறனை உறுதி செய்வதற்குப் பங்களித்துள்ளன. இலங்கை வங்கியின் தலைவர் திரு. காவிந்த டி சொய்சா இது குறித்து தனது பார்வையை பகிர்ந்துகொள்கையில்: "இலங்கை வங்கி 2024 ஆம் ஆண்டின் சிறந்த வங்கியாக THE BANKER சஞ்சிகையால் பெயரிடப்பட்டமையானது எங்களின் நிதி வலிமை மற்றும் புதுமையான அணுகுமுறையை மீண்டும் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இந்த அங்கீகாரம் எங்கள் வாடிக்கையாளர்களின் நம்பிக்கைக்கும் எங்கள் பணிக்குழாமின் அயராத உழைப்புக்கும் கிடைத்த வெற்றியாகும். வருங்காலங்களிலும் நிதி ஸ்திரத்தன்மையை உறுதி செய்தவாறே ஆகச்சிறந்த வங்கித் தீர்வுகளை நாம் தொடர்ந்து வழங்குவோம்." என்று கூறினார்.

இலங்கை வங்கியின் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. ரசல் பொன்சேகா இதுபற்றிக் கூறியதாவது: "இந்த அங்கீகாரம் இலங்கை வங்கிக் குடும்பத்திற்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவமாகும். இவ்விருதை முதலில் 2021ஆம் ஆண்டிலும், மீண்டும் 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளிலும் வென்றிருப்பதன் மூலம், நாம் வங்கிச்சேவையில் சிறந்த தரத்தை நிலைநிறுத்தியுள்ளோம் என்பது உறுதியாகியுள்ளது. இந்த மதிப்புமிக்க சர்வதேச விருது, எமது நிதி ஸ்திரத்தன்மை, முன்மாதிரியான முகாமைத்துவ நடைமுறைகள், நம்பகத்தன்மை, வெளிப்படைத்தன்மை என்பவற்றில் நாம் காட்டும் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு சான்றாகும்.

இது எங்களுக்கு மட்டுமல்ல, எங்கள் வாடிக்கையாளர்களுக்கும் அனைத்து இலங்கையர்களுக்கும் கிடைத்த வெற்றியாகும். உலகின் சிறந்த 1000 வங்கிகள் பட்டியலில் இடம்பிடித்திருப்பது உலகளாவிய வங்கித் தரத்தை அடைவதற்கான எங்களின் நெடுநாள் அர்ப்பணிப்பைக் காட்டுகிறது. இந்த குறிப்பிடத்தக்க மைற்கல்லை அடைவதற்கு உறுதுணையாக இருந்த எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்கள், பணிப்பாளர் சபை, அரசாங்கம் என எங்கள் பங்குதாரர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்."

விவசாயம், கைத்தொழில் மற்றும் சுற்றுலா உள்ளிட்ட முக்கிய துறைகளுக்கு ஏற்ப நிதித் தீர்வுகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் இலங்கை வங்கி தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கிறது. இலங்கை வங்கி இளையோர் கடன் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம், 10000 இளம் தொழில்முனைவோருக்கு தொடர்ந்து ஆதரவளித்து, அவர்களின் வியாபாரக் கனவுகளை நனவாக்க உதவுகிறது.

மேலும் இலங்கை வங்கி பெண் தொழில்முனைவோரை 'ரன்லிய' கடன் திட்டத்தின் மூலம் வலுவூட்டுகிறது. இது பெண்கள் நிதிச் சுதந்திரத்தை அடைவதற்கும் நிலையான வியாபாரங்களை உருவாக்குவதற்கும் உதவியாக இருக்கிறது.

பின்தங்கிய கிராமங்களுக்கான 'BOC GAMMANA' திட்டமானது கிராமவாசிகளின் நிதி அறிவை மேம்படுத்துவதிலும் அவர்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதிலும் என்பவற்றில் கவனம் செலுத்துகிறது. நிதியை திறம்பட நிர்வகிப்பதற்குத் தேவையான அறிவினை வழங்கி கிராமப்புறங்களை மேம்படுத்துவதை இந்த முன்முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.

வங்கியானது அதன் பொருளாதார பங்களிப்புகளைத் தாண்டி பெருநிறுவன சமூகப் பொறுப்பிலும் (CSR) முன்னுதாரண மாகத் திகழ்கிறது. மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கி கல்வித்துறையை ஆதரித்தல், சுகாதாரத்துறைசார் முன்னெடுப்புகளை ஊக்குவித்தல், சுற்றுச்சூழலுக்கு உகந்த நடைமுறைகளை அதன் செயற்பாடுகளில் ஒருங்கிணைப்பதன் மூலம் பசுமைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதிசெய்தல் என்பனவும் வங்கியின் சமூகப் பொறுப்புக்கான சான்றுகளாகும்.

இலங்கையில் டிஜிட்டல் வங்கிச் சேவைகளை அறிமுகப்படுத்துவதில் இலங்கை வங்கியே முன்னணியில் உள்ளது. SMARTPAY, ஸ்மாட் இணைய வங்கிச் சேவை, கைபேசி வங்கிச் சேவை (B APP), பற்று அட்டைகள் மற்றும் BOC CONNECT போன்ற டிஜிற்றல் தளங்களை உருவாக்கி வாடிக்கையாளர்களுக்கான வங்கித்தீர்வுகளில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

தீவு முழுவதும் உள்ள அதன் 2300 இற்கு மேற்பட்ட பரவலான சேவை மைய வலையமைப்பும் அதன் அதிநவீன தொழில்நுட்பங்களும் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு பரந்த அளவிலான நிதிச் சேவைகளை வழங்கி வருகின்றன. வங்கியானது 'பிராண்ட் ஃபைனான்ஸ் லங்கா' நிறுவனத்தால் இலங்கையின் முதற்தர வங்கி எனவும் 2024ஆம் ஆண்டுக்கான SLIM KANTAR மக்கள் விருதுகள் நிகழ்வில் இந்த ஆண்டுக்கான மக்கள் வங்கிச் சேவை வணிக நாமம் எனவும் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இலண்டனிலுள்ள வங்கித் துணை நிறுவனம் உட்பட சென்னை, மாலே, ஹுலுமாலே மற்றும் சீஷெல்ஸ் ஆகிய வெளிநாட்டுக் கிளைகளுடன் வலுவான சர்வதேச வியாபகம் கொண்ட நிறுவனமாகத் திகழும் இலங்கை வங்கியானது நாட்டு மக்கள் அனைவரையும் உள்ளடக்கிய நிதி உதவிகளை வழங்குவதிலும் நாட்டின் வளர்ச்சியையும் வளத்தையும் கட்டி எழுப்புவதிலும் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

# புதிய அரசாங்கம் மரணப்பொறியிலா? அரசியல் உரையரங்கு ஞாயிறன்று

யாழ்ப்பாணம், ஜன.3

சர்வதேச நாணய நிதியம் ரணில் அரசாங்கத்துடன் செய்துகொண்ட கடன் ஒப்பந்தம் நாட்டுக்கு 'மரணப் பொறி' எனக் கூறிய அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் அந்தப் பொறிக்கு உள்ளேயா? அல்லது வெளியேயா? எனும் தலைப்பிலான அரசியல் உரையரங்கு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மூத்த பொதுவுடைமைவாதி சி.கா.செந்திவேல் தலைமையில் மக்கள் போராட்ட முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெறும் நிகழ்வில் அரசியல் ஆய்வாளர் டேவிட் சுரேன், பொருளியியல் ஆய்வாளர் கல்ப ராஜபக்ச, தொழிற்சங்கச் செயற்பாட்டாளர் மாக்ஸ் பிரபாகர் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகள் நிகழ்த்தவுள்ளனர். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## கழுவுகின்ற நீரில் நழுவும் அரசாங்கம்

இலங்கை நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணத் தேவையான பொருளாதார நிகழ்ச்சி நிரல் புத்தாண்டில் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க. புத்தாண்டின் முதல்நாளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தூய இலங்கை வேலைத்திட்டத்தின் ஆரம்பநிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு கூறி யிருக்கின்றார். அதேநேரம், நாட்டை ஊழல், மோசடியற்றதாக மாற்றும் முயற்சிகள் தொடர்பாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால் நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்லும் தனது முனைப்புகளைத் தொட்டுக்காட்டிய ஜனாதிபதி - நாட்டின் முன்னேற்றத்துக்குப் பிரதான தடைக்கல்லாக இருக்கும் இனப்பிரச்சினை விடயத்தைப் பற்றி பேசுவதை தவிர்த்திருக்கின்றார்.


அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்று, அவரது தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைத்துள்ள தற்போதைய சூழ்நிலையில், நாட்டில் புரையோடிப் போயிருக்கும் - நாட்டின் வீழ்ச்சிக்கு முதன்மைக் காரணமாக இருக்கும்- தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் ஜனாதிபதியும், அரசாங்கமும் நழுவல் போக்கையே கைக்கொண்டிருப்பதை அவதானிக்கமுடிகின்றது. சகல இன மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய புதிய அரசியலமைப்பு ஒன்றின் மூலமாகவே தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்படும் என்று ஜனாதிபதியாகத் தெரிவாவதற்கு முன்னர் கூறியிருந்த அநுரகுமார, நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் தேசிய இனப்பிரச்சினை விடயத்தைத் தள்ளிவைத்தே செயற்பட்டு வருகின்றார். நாட்டின் முன்னேற்றத்துக்கான பாதைகளை அவரது தலைமையிலான அரசாங்கம் திட்டமிடுமானால், அந்தப் பட்டியலில் முதல்நிலையில் இருப்பது தேசிய இனப்பிரச்சினையே. ஆனால் அரசாங்கமோ தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அக்கறையற்றே இருக்கின்றது.

'தேசிய இனப்பிரச்சினைக்கு சகல இனங்களையும் சேர்ந்த மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றே நிரந்தரமான தீர்வாக அமையும் 'என்பது கேட்பதற்கு நன்றாக இருந்தாலும், அதன் நடைமுறைச் சாத்தியம் கேள்விக்குரியதொன்றே. புதிய அரசியலமைப்பின் மூலம் இனப்பிரச்சினைக்கு சகல இனத்தவர்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வைக் காண்பது என்பது பிரச்சினையை கையாள்வதில் இருந்து நழுவும் ஒரு தந்திரோபாயம் என்றும் கருதலாம். நாட்டின் முன்னேற்றத்தைப் பற்றி அநுரகுமார திஸாநாயக்க இதயபூர்வமாகச் சிந்திப்பவராக இருந்தால் அவர் முதலில் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் துணிவான முடிவுகளை எடுக்க வேண்டியது அவசியம். இனப்பிரச்சினைக்கு உருப்படியான அரசியல் தீர்வொன்றைக் காணத்தவறியதால் நாடும், மக்களும் எதிர்கொண்ட அவலங்கள் ஜனாதிபதிக்குத் தெரியாததும் அல்ல. அந்தப் படிப்பினைகளை மனதில் கொண்டாவது, நாட்டினதும் மக்களினதும் எதிர்கால நலன்களைப் பற்றிய மானசீகமான அக்கறையுடன் கூடிய அரசியல் நேர்மையுடன் அநுரகுமார திஸாநாயக்கவும் அவரது அரசாங்கமும் நடந்துகொள்ள வேண்டும். தேர்தல் அரசியலுக்காக சந்தர்ப்பவாத அணுகுமுறைகளைத் தவிர்த்து, துணிவுடனும் - அரசியல் நேர்மையுடனும் அரசியல்தலைவர்கள் செயற்படாவிட்டால் நாட்டில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. கழுவுகின்ற நீரில் நழுவுகின்ற மீனாக இந்த விடயத்தில் அநுர அரசாங்கம் நடந்துகொள்ளுமானால், இலங்கை ஒருபோதும் முன்னேறவே முடியாது.

நாளொரு நல்வார்த்தை

"சொல்வது தெளிந்து சொல்
செய்வது துணிந்து செய் "

– மகாகவி பாரதி –




## காரைநகர் படகுக் கட்டுமானம் புனரமைக்க இந்தியாவால் நிதி

**கொழும்பு, ஜன.3**
**காரைநகர் படகுக் கட்டுமானத் தளத்தை புனரமைப்பதற்கு இந்தியா - இலங்கை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதற்காக இந்தியா 290 மில்லியன் ரூபாவை நிதியாக வழங்கவுள்ளது.**

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் எச்.ஈ. சந்தோஷ் ஜா மற்றும் இந்தியாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் எச்.இ.சேஷ்னுகா திரேனி செனவிரத்ன ஆகியோர் கடந்த டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி கையெழுத்திட்டுள்ளனர்.
வரையறுக்கப்பட்ட சீனோர் நிறுவனத்துக்குரிய காரைநகர் படகு கட்டுமான நிலையத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல், தேவையான இயந்திர உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களைப் பெறுகை செய்தல் போன்றவற்றுக்காக நிதியொதுக்கீடுகளை வழங்குவதற்கே இந்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது. (ச-இ)




## முட்டை விலை மீண்டும் உயர்வு

கொழும்பு, ஜன.3
கடந்த சில நாள்களாக சந்தையில்வீழ்ச்சியடைந்திருந்த முட்டையின் விலை மீண்டும் உயர்ந்துள்ளது. சந்தையில் முட்டை ஒன்றின் விலை 36 ரூபாவாக அதிகரித்துள்ளதாகச் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
கடந்த சில நாள்களாக முட்டைவிலை 28 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## 200 தொன் இறக்குமதி அரிசி சதொச ஊடாக விநியோகம்

கொழும்பு, ஜன.3
அரசாங்கம் இறக்குமதி செய்த 780 மெற்றிக் தொன் அரிசியில் 200 மெற்றிக் தொன் அரிசி சதொச ஊடாகவும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகவும் விநியோகிக்கப்பட்டுவருவதாக சதொச தலைவர் ரவீந்திர பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.
அதேவேளை தனியார் இறக்குமதி செய்த 80 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியும் சந்தையில் விற்பனைக்கு வந்துள்ளதாகவும் 26 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி மேலும் இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ச-6)



## அரச தளங்கள் மீட்கப்பட்டன!

சைபர்த்தாக்குதலுக்கு உள்ளான அரச அச்சகத் திணைக்களத்தின் இணையத் தளமும், பொலிஸாரின் யூடியூப் சேனலும் தற்போது மீளமைக்கப்பட்டு வருவதாக இலங்கை கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.
குறித்த சைபர் தாக்குதல்களை எந்தத் தரப்பினர் நடத்தினர் என்பது குறித்த உறுதியான தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## தேசியப் புலனாய்வுப் பிரிவு; புதிய தலைவர் நியமனம்

கொழும்பு, ஜன.3
மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய இலங்கையின் தேசியப் புலனாய்வுப் பிரிவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய தனது நியமனக் கடிதத்தை பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகோந்தவிடமிருந்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை பெற்றுக்கொண்டார். தேசியப் புலனாய்வுப் பிரிவின் பிரதானியான மேஜர் ஜெனரல் ருவான் குலதுங்க கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதியிலிருந்து ஓய்வுபெற்றதையடுத்தே அவரின் இடத்துக்கு ருவான் வணிகசூரிய நியமிக்கப்பட்டுள்ளார். (ச-இ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டெங்கு நோய்த்தாக்கம் யாழ்ப்பாணத்தில் வீரியம்

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 3

**யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய்த்தாக்கம் அதிகரித்து வருவதாகவும் கடந்த ஆண்டில் மாத்திரம் 5 ஆயிரத்து 890 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் ஒரு இறப்பு பதிவாகியுள்ளதாகவும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய்த்தாக்கம் நவம்பர் மாதம் முதல் அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. நவம்பர் மாதத்திலே 134 நோயாளர்களும் டிசெம்பர் மாதத்திலே 241 நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

டிசெம்பர் மாதம் மூன்றாவது வாரத்தின் பின்னர் டெங்குநோயின் தாக்கம் தீவிரமாக அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதிவரை 18 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்கள். அதன் பின்னர் 28 ஆம் திகதி 8 நோயாளர்களும் 29 ஆம் திகதி 12 நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளார்கள். எனவே டெங்கு பரவலைத் தடுக்க விசேட கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் - என்றார். (ச-125)

## வடக்கில் கடந்தாண்டு 3,499 வர்த்தகர்கள் விதிமீறல் 2,58,38, 500 ரூபா தண்டம்!

வவுனியா, ஜன. 3

2024 ஆம் ஆண்டு வடமாகாணத்தில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட 3499 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களின் ஊடாக 2 கோடியே 58 இலட்சத்து 38 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையின் வடமாகாண உதவிப்பணிப்பாளர் அப்துல் லத்தீவ் ஜக்வார் சாதிக் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் 3445 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 3361 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் 744 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டமையுடன் 903 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 946 வர்த்தகர்களுக்கு வவுனியா நீதிமன்றத்தின் ஊடாக 5 இலட்சத்து 74 ஆயிரத்து 800 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரிசி விற்பனை தொடர்பாக வடமாகாணத்தில் 774 விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், வவுனியா மாவட்டத்தில் 126 விசேட சுற்றிவளைப்புகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-110)

## சூழலைக் காக்க விசேட திட்டம்!

யாழ்ப்பாணம், ஜன.3

யாழ். மாவட்ட வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் விசேட திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வீட்டுத்தோட்டத்தின் மூலம் வனமூடுகையை ஏற்படுத்தும் முகமாக குடும்பமொன்றுக்கு 4 தேக்கு, 2 தென்னை, ஒரு பலா வீதம் 100 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (ச-33-125)

## வயலுக்குள் புகுந்த கார்



வவுனியா, ஜன. 3

வவுனியா ஓமந்தை ஏ-9 வீதியில் பயணித்த சொகுசுக் கார் ஒன்று வீதியை விட்டுவிலகி நேற்றுமுன்தினம் புதன்கிழமை விபத்துக்குள்ளாகியுள்ளது.

வேகக்கட்டுப்பாட்டையிழந்த நிலையில் கார் வயலுக்குள் புகுந்ததில் இந்த விபத்து நேர்ந்துள்ளது. விபத்தில் கார் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் வாகனத்தில் பயணித்தவர்களுக்கு எவ்வித உயிராபத்துகளும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-110)

## சந்திப்பு...



யாழ். மாவட்ட விமானப்படையின் கட்டளை அதிகாரியாகப் பொறுப்பேற்ற கப்டன் டபிள்யூ.எம். ஏ.குமாரசிறி, யாழ். மாவட்டச் செயலர் ம. பிரதீபனை மரியாதை நிமித்தம் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார். (ச–25,9,66)

## மாதகல் காந்திஜி கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம் , ஜன.3

மாதகல் காந்திஜி விளையாட்டுக் கழகம் ஏல அடிப்படையில் தெரிவு செய்த கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டி அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 4 அணிகள் பங்கேற்கும் போட்டியின் இறுதிப்போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று நடைபெறுமென கழகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-25, 9)

## கடை உடைத்து கைபேசிகள் திருட்டு

கிளிநொச்சி, ஜன.3

கிளிநொச்சி- கனகபுரம் வீதியிலுள்ள கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அதிலிருந்த பொருள்கள் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு களவாடப்பட்டுள்ளதாக கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சுமார் ஒரு இலட்சம் ரூபா மதிக்கத்தக்க கைப்பேசி மற்றும் ஸ்மார்ட் கடிகாரம் என்பனவே களவாடப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பகட்ட விசாரணையில், கடையில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி. பதிவின் அடிப்படையில் 20 வயது மதிக்கத்தக்க இரண்டு நபர்கள் குறித்த திருட்டில் ஈடுபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (4527)



## கரைதுறைபற்று விளையாட்டு மைதானம் திறப்பு!

முல்லைத்தீவு, ஜன.3

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் மேம்படுத்தப்பட்ட முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பொதுவிளையாட்டு மைதானம் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்பட்டது. தொடர்ந்து, உதைபந்தாட்டப் போட்டியும் இடம்பெற்றது. (ச-33-27)

## சாட்சி மீது வாள்வெட்டு முயற்சி பிரதான சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஜன.3

யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்கு வழக்கு ஒன்றுக்கு சாட்சிக்காக வந்த நபரை வாளால் வெட்ட முயற்சித்த சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாள்வெட்டு வழக்கு ஒன்றின் சாட்சிக்காக கடந்த மே மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்கு வந்த நபரை, நீதிமன்றத்துக்கு முன்னால் வைத்து வாளால் வெட்டித் தாக்க முற்பட்ட மூவரில் இருவர் அன்றையதினமே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

பிரதான சந்தேகநபரென கருதப்படுபவர் தலைமறைவாகியிருந்த நிலையில் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் ஆரியகுளத்துக்கு அருகாமையில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் மீது வாள்வெட்டு தொடர்பாக மூன்று திறந்த பிடியாணை உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத்திறனாளர்களுக்கு மறுக்கப்படும் உரிமைகள்

## ம.உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஜன.3

**இலங்கை அரசமைப்பு மற்றும் சுற்றுநிருபங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் வழங்கப்பட்ட போதிலும் நடைமுறையில் அவை மறுக்கப்படுவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மாற்றுத்திறனாளிகள் கல்வி கற்பதிலிருந்து தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதுவரை அவர்களுக்கான ஏற்பாடுகள் அரசமைப்பு மற்றும் சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட்டும் அவர்கள் நடைமுறையில் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர். குறிப்பாகக் கூற வேண்டுமானால் இலங்கை அரச வேலைவாய்ப்பைப் பெறுபவர் எப்பாகத்திலும் கடமையாற்றவேண்டும் எனக் கூறப்படுகிறது.

தேக ஆரோக்கியம் வேலை வாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகள் புறக்கணிக்கப்படுவதற்கு ஒரு காரணமாக அமைகிறது.

ஆகவே வட மாகாணம் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசம். பல ஆயிரம் மாற்றுத்திறனாளிகள் உள்ள நிலையில் அவர்களின் தேவைகள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட கவனம் செலுத்தும் - என்றார். (ச-இ)

# பாதயாத்திரை

யாழ்ப்பாணம், ஜன.3

திருவெம்பாவை விரதத்தை முன்னிட்டு இலங்கைச் சைவ மகாசபையின் வருடாந்த ஈழத்துச் சிதம்பரம் நோக்கிய ஆன்மீகப் பாதயாத்திரை மாதகல் சம்புநாத ஈச்சரர் முன்றலில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

சம்பில்துறை சம்புநாத ஈச்சரர் ஆலயத்தில் ஆரம்பமாகும் ஆன்மீகப் பாதயாத்திரை பல்வேறு இந்து ஆலயங்களைத் தரிசித்தவாறு சுழிபுரம், மூளாய், பொன்னாலை ஊடாக காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தைச் சென்றடையும். இதில் சைவ மக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் இலங்கை சைவமகாசபையினர் கேட்டுள்ளனர். (ச-45-66)




# முல்லை மாவட்டத்தில் குறைகேள் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், ஜன.3

'தூய இலங்கை' தேசிய செயற்றிட்டம் மற்றும் கிராமிய வறுமையொழிப்பு உட்பட பல்வேறு அரச செயற்றிட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்த மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அரச சேவை தொடர்பாக மக்களின் அபிப்பிராயங்கள் ஆகியவற்றைக் கேட்டறிய முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் குறைகேள் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

செயற்றிட்டத்தின் ஆரம்பநிகழ்வு முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமா மகேஸ்வரன் தலைமையில் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவின் கள்ளப்பாடு தெற்குக் கிராம அலுவலர் பிரிவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (ச-125)




# சிமெந்து ஏற்றிவந்த லொறி குடைசாய்வு

## இருவர் காயம்

வவுனியா, ஜன.3

வவுனியா ஓமந்தையில் சிமெந்துகளை ஏற்றிச்சென்ற லொறி குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளனர்.

வவுனியா ஓமந்தை பணிக்கர்நீராவிப் பகுதியில் நேற்றுக் காலை இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சிமெந்துகளை ஏற்றிவந்த லொறியே இவ்வாறு குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை போக்குவரத்துப் பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (ச-110)

# பாலங்களைப் புனரமைக்குக

கிளிநொச்சி, ஜன.3

நீண்டகாலமாக புனரமைப்பின்றிக் காணப்படும் கிளிநொச்சி ஏ-35 பிரதான வீதியிலுள்ள புளியம்பொக்கணை பாலம் மற்றும் கண்டாவளைப் பாலங்களில் தொடர்ச்சியாக இரவுவேளைகளில் விபத்துகள் இடம்பெற்றுவருவதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர். கடந்த புதன்கிழமை குறித்த பாலத்தில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த கப்ரக வாகனமொன்று விபத்துக்குள்ளாகியதால் வாகன சாரதி காயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்தப் பகுதியில் அமைந்துள்ள பாலங்களைப் புனரமைத்து பயணிகளின் பாதுகாப்பையும் உறுதிசெய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-25,113)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன.3

மானிப்பாய் அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானத்தின் திருவெம்பாவை உற்சவதினத் தொடர் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு நாளை சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை வரை காலை 6.15 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தொடர் சொற்பொழிவை சைவப்புலவர் செ.த.குமரன் 'திருவாசகத் தேன்' எனும் விடயப் பொருளில் நிகழ்த்தவுள்ளார். இதிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ச-45)

# கோடாவுடன் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், ஜன.3

மாதகல் சகாயபுரத்தில் 40 லீற்றர் கோடாவுடன் சந்தேகநபர் ஒருவர் இளவாலைப் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

இளவாலைப் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமைய மாதகல் சகாயபுரத்துக்கு விரைந்த பொலிஸார் கசிப்பு உற்பத்திசெய்யும் இடத்தை முற்றுகையிட்டனர். இதன்போது 40 லீற்றர் கோடா மீட்கப்பட்டதோடு 37 வயதான குடும்பஸ்தர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதோடு சந்தேகநபரை பொலிஸ் பிணையில் செல்வதற்கு அனுமதி வழங்கியுள்ளதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ச-125)

# பயன்பாடின்றிக் காணப்படும் பொருளாதார மத்திய நிலையம்

யாழ்ப்பாணம், ஜன. 3

தென்மராட்சி மட்டுவில் பிரதேசத்தில் வியாபார நடவடிக்கைகளுக்காகத் திறந்து வைக்கப்பட்டு இன்றுவரை பயன்படுத்தப்படாமல் காணப்படும் விசேட பொருளாதார மத்திய நிலையத்தை நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் நேற்று வியாழக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்த விற்பனை நிலையம் யாழ். மாவட்டச் செயலகத்தால் 200 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு சுமார் மூன்று வருடங்கள் ஆகின்றபோதிலும் எந்தவித வர்த்தக நடவடிக்கைகளும் இடம்பெறாத நிலையிலும் தனியார் நிறுவனக் காவலர்களால் ஒப்பந்தம் செய்யப்பட்டு இன்றுவரை ஊதியம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-25,28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் தேவை

சிறு குழுக்களாக A/L மாணவர்களுக்கு இந்து நாகரிகம் பாடம் கற்பிற்பதற்கு அனுபவம்மிக்க ஆசிரியர் தேவை.
தொடர்பு கொள்ளவும்.
THE ROYAL COLLEGE OF JAFFNA
Tel: 077 675 1649
(CS/57101) J-1

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 65 ரூபா.
நிலம் இழுத்துப் பதிக்க - 90 ரூபா.
077 334 1281
(CS29601) N-1

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை - சுன்னாகம்
## ஆதனவரி அறவீடு தொடர்பான அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் மற்றும் உடுவில் உபஅலுவலகங்களில் **தை மாதம் 31ம் திகதிக்குள் 2025ம் ஆண்டிற்கான சோலைவரி செலுத்துபவர்களுக்கு 10% கழிவு வழங்கப்பட்டு வருகின்றது.** எனவே மக்கள் தங்களது ஆதனத்திற்கான சோலைவரியினை எமது சுன்னாகம் மற்றும் உடுவில் உப அலுவலகங்களில் வேலைநாட்களில் காலை 8.30 - பிற்பகல் 4.00 மணி வரையும், தைப்பொங்கல் விடுமுறை தவிர்ந்த விடுமுறை நாட்களிலும், சனி மற்றும் ஞாயிறு நாட்களிலும் காலை 8.30 - பிற்பகல் 2.00 மணி வரையும் செலுத்தி 10% கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதைத் தங்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**திருமதி சாரதா உருத்திரசம்பவன்**
**செயலாளர்.**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை. சுன்னாகம்.**
**03.01.2025.**
(cr 44021) (N-1)

# வைகுந்த ஏகாதசி


யாழ்., ஜன. 3
வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில் வைகுந்த ஏகாதசிப் பெரு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. பகவத் கீதை மற்றும் திருப்பாசுரம் முற்றோதல், சமயச் சொற்பொழிவு, கலை நிகழ்வுகள், வைகுந்த வாசல் திறப்பு, மோட்ச அர்ச்சனை, பஜனை நிகழ்வுகள், திருப்பாவை உற்சவம், பிரசாதம் வழங்கல் போன்றவை நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச-25)

## சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்(வ-து)
## அரைக்கும் ஆலைக்கு தொழிலாளி தேவை

எமது சங்கத்திற்குச் சொந்தமான சரசாலையில் அமைந்துள்ள அரைக்கும் ஆலைக்கு தொழிலாளி தேவை. வேலையில் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் மற்றும் கடமை தொடர்பான விபரங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். ஆர்வமுடையோர் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று எதிர்வரும் 10.01.2025ற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

**கண்டி வீதி, சாவகச்சேரி**
03.01.2025
பொதுமுகாமையாளர்
T.P.No-0212270830
(CR/44024) J-1

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் இளையதம்பி செல்வராசா**
(ஓய்வு பெற்ற மருந்து கலவையாளர்)
திதி : மார்கழி மாத பூர்வபக்க சதுர்த்தி (03.01.2025)

எமது குடும்பத் தலைவரின் 1ம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (03.01.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். இவ் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

தோற்றம் 30.03.1936
மறைவு 14.01.2024

மாசிவன், நீர்வேலி மேற்கு.
குடும்பத்தினர்
(CS/57088) J-1

# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 25 . 04 . 1994



அரக்கன் அழிவில் 03 . 01 . 2016

**அமரர் தவராசா கபிஷாந்**

அழகான உம் உருவம் மறைந்து
ஆண்டு ஒன்பது ஆகிவிட்டது - ஆனால்
எம் உயிர் இருக்கும் வரை
எமது நினைவில் நீர் என்றும்
உயிருடன் வாழ்வீர்

18, ஈச்சங்காடு,
அரியாலை, யாழ்ப்பாணம்.
076 539 8916

என்றும் உம் இருபத்தொரு வருட நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
(CS 57105) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 04 . 1993



மறைவு 01 . 01 . 2025

## கற்பகநாதன் திலக்ஷன்

V.H லேன் இருபாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கற்பகநாதன் திலக்ஷன் நேற்றுமுன்தினம் (01.01.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கற்பகநாதன் - சந்திரகாந்தா (ரஞ்சி) தம்பதியரின் பாசமிகு மகனும், திவாகர், கோபிகா, ஜனுசிகா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், லட்சுமி, கஜேந்திரன், நந்தகுமார் ஆகியோரின் அன்புமிக்க மைத்துனரும், றித்திகா, காருண்யா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், பிரனுஷா, வக்ஷலன் ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செக்கடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**V.H. லேன், கோப்பாய் தெற்கு,**
**இருபாலை,**

தகவல்:
குடும்பத்தினர்
077 310 1516
077 363 9488
(CS/57099) N-1

# OBITUARY NOTICE

Born 30 . 06 . 1938



Call to Rest 30 . 12 . 2024

## Donald Ratnaraja

It is with great sadness that we announce the passing away of our Father Donald Ratnaraja in Canada. He was a son of late A. S. P and Mrs. Ratnaraja, grandson of late Muthaliyar Ponnampalam, and son-in-law of the late Rt. Rev. Dr. Sabapathy Kulendran and Mathuram, beloved wife of Karuna (Canada), and loving father of Mario, Patrick (UK), Ronnie, Shamini (Australia) Kamini and David (Australia), father-in-law of Mehala, Shivanthi (UK), Chithra, Swendraj Brodie (Australia), late. Rev. Dr. D. S. Solomon, and Dayani (Australia), treasured grand father of Rannan, Darren, Sherina, Priyanka, Lakshi, Ria, Shawn, Samson, Shashini, Jordon, Asha, Dilan, Dino, Davina and Stephie. He was a loving brother of late Lakshman, late Harish Chandra, James, Shobana Deepan and late Shanthana Mather.


A service of Thanksgiving for the life and work of Donald Ratnaraja will be held on Saturday 4th January, 2025 at 4:30 pm, on the day of the funeral in Canada. Friends and relations please accept this notification, and attend the Service, if convenient, at The Cathedral, Vaddukoddai.

College Lane,
Vaddukoddai.

Kamini Solomon
and Family
076 557 7157, 076 655 4221
(CS/57104) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்கள் மத்தியில் வைரஸ் காய்ச்சல்!



கொழும்பு, ஜன. 3
சிறுவர்கள் மத்தியில் பலவகை வைரஸ் காய்ச்சல் தற்போது பரவிவருவதாக சிறுவர் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.
பாடசாலை விடுமுறை என்பதாலும் சுற்றுலா மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளில் அதிகளவில் ஈடுபடுவதாலும் பிள்ளைகள் வைரஸ் தொற்றுகளுக்கு ஆளாவதே இதற்குக் காரணம் என மருத்துவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இன்ஃளுயன்ஸா ஏ மற்றும் பி நோய், வயிற்றுப்போக்கு, கடுமையான குளிர், உடலில் சிவப்புப் புள்ளிகள், காய்ச்சல் மற்றும் நீண்டகால இருமல் ஆகியவை வைரஸால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் அறிகுறிகளாகத் தெரிவிக்கப்படுகின்றன. இதுகுறித்து பெற்றோர் அவதானமாகச் செயற்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)




# உயர்த்தப்படும் மகாபொல

கொழும்பு, ஜன.3
**பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவை பத்தாயிரம் ரூபாவாக அதிகரிக்க ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கவனம் செலுத்தியுள்ளார்.**

தற்போதைக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதம் தோறும் ஐயாயிரம் ரூபா மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவாக வழங்கப்படுகின்றது. முன்னைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் தொடக்கம் குறித்த கொடுப்பனவு 7 ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. இந்நிலையில் மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவை பத்தாயிரம் ரூபா வரை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உத்தேசித்துள்ளார். நிதியமைச்சின் அதிகாரிகளுடன் அவர் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-இ)

## 2025ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டுப் பணிகள் சட்டமா அதிபரும் ஒப்புதல்!

கொழும்பு, ஜன. 3
2025ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட வரைவைத் தயாரிப்பதற்கு சட்டமா அதிபரும் ஒப்புதல் வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டவரைவைத் தயாரிப்பதற்கு அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்த நிலையில், தற்போது சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)



## கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், ஜன. 3
உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் தலைவருக்கும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனுக்கும் இடையிலான கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் சுகாதார ரீதியான சவால்களை நிவர்த்திசெய்ய வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (ச-22,125)



## முதலாம் தரத்துக்கு மாணவர் உள்ளீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன.3
2025 ஆம் ஆண்டு அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர் சேர்க்கைக்கான திகதியை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது. அதன்படி சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளில் முதலாம் தர மாணவர்களுக்கான சேர்க்கை ஜனவரி 30 ஆம் திகதி அன்று ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## போலியான கடவுச்சீட்டுடன் தமிழர்கள் இருவர் கைது!



கொழும்பு, ஜன. 3
போலியான இலங்கைக் கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி வெளிநாடு செல்ல முயற்சித்த தமிழர் இருவர் கட்டுநாயக்கவிமானநிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
போலியான இலங்கைக் கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி நேபாளத்தின் காத்மண்டு செல்ல முயற்சித்த வேளையில் குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமானநிலையக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 20 . 11 . 1957
மறைவு 04 . 12 . 2024

கடந்த 04.12.2024 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
அமரர் மாரிமுத்து வேலாயுதம்
(உரிமையாளர் - அனுஜா ஸ்ரோர்ஸ், கொம்பனித் தெரு, கொழும்பு)
அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலி நாளை மறுதினம் (05.01.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் பன்னாலை பிள்ளையார் கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளை எம்முடன் பல வழிகளிலும் துயர் பகிர்ந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் இன்றுவரை எமக்கு பல வழிகளிலும் உதவிகளைச் செய்த அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
பன்னாலை, தெல்லிப்பழை.
(CS/57095) J-1
குடும்பத்தினர்
076 282 7109

## கடந்த ஆண்டிலேயே வெளிநாட்டு வேலைகளுக்கு அதிகளவானோர் பயணம்!

கொழும்பு, ஜன. 3
இலங்கையின் வரலாற்றில் 2024ஆம் ஆண்டிலேயே வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகப் புறப்பட்டவர்கள் அதிகளவாகப் பதிவாகியுள்ளனர் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.
இதற்கு முன்னர் 2022 இல் அதிக எண்ணிக்கையிலான வெளிநாட்டு வேலைவாய்ப்புப் புறப்பாடுகள் பதிவாகியிருந்ததாகவும், கடந்த 2019 முதல் 2024 வரையான ஆறு வருடங்களில் மொத்தம் 1.3 மில்லியன் பேர் வெளிநாட்டு வேலைகளுக்காக வெளியேறியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
2024 ஆம் ஆண்டில், மொத்தம் 185,162 ஆண்களும் 127,674 பெண்களும் வெளிநாட்டு வேலைகளுக்காக வெளியேறியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கிளிநொச்சி கணேசபுரம் சனசமூக நிலையத்தில் 'பசுமைச் சூழலை உருவாக்கல்' எனும் தொனிப்பொருளிலான நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கிளிநொச்சி மாவட்டப் பதில் செயலர் எஸ்.முரளீதரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இதன்போது மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன. (ச-25, 113)



பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தின் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் நிரோஜா பிரதீ பனின் சகோதரியும் ஷாகிரா கல்லூரியின் ஆசிரியையுமான ஜெயக்குமார் நிதுஷாவின் பிறந்ததினத்தை முன்னிட்டு பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலைக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ச-33-9)

## இளைஞரை தீண்டியது பாம்பு

யாழ்ப்பாணம், டிசெ. 3
மட்டுவில் பகுதியில் இளைஞர் ஒருவர் பாம்பால் தீண்டப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்ட அவர், சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-22)

**வகுப்புக்கள்**
தரம் 5 வரையான மாணவர்களுக்கு அனைத்துப் பாடங்களும் வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு:- 077 311 6202
(CS2172A) V-1



வேலணைப் பிரதேச சமுர்த்தி சிப்தொர புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது. (ச-25.9)

## மரண அறிவித்தல்

### கஜன் யாழினி

சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகவும், இல.126/ கனகாம்பிகைக் குளத்தை கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட கஜன் யாழினி அவர்கள் நேற்று (02.01.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பரமானந்தம்-அமிர்தாம்பிகை தம்பதியின் அன்பு மகளும், வரதீஸ்வரன்-மோகனாம்பிகை தம்பதியின் மருமகளும், கஜன் அவர்களின் அருமை மனைவியும், இசைநிலா, காலஞ்சென்ற அபிவர்ணா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2025) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இரணைமடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள் ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
(CS2174) V-1

## தொழிற்பயிற்சி கற்கைநெறிகள்

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2025 ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டுக்கான முழுநேரக் கற்கை நெறிகள், யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், கணிய அளவையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையலாளர், நீர்க்குழாய் பொருத்துனர், மோட்டார் சைக்கிள் திருத்துனர், அலுமினியம் பொருத்துநர், கணினி வன்பொருள் திருத்துனர், கணினி படவடிமைப்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழந்தை பராமரிப்பாளர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடைவடிவமைப்பாளர், சிகையலங்கரிப்பாளர், அழகுக்கலைவல்லுநர், முன்பள்ளி ஆசிரியர், விரைவுசேவை உணவு வழங்குநர், பெற்றோல் மற்றும் டீசல் வாகன இயந்திரத் திருத்துனர் போன்ற கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவை தேசிய தொழிற்தகைமை மட்டம்-4 சான்றுதழுக்கான பயிற்சிநெறிகளாகும். கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 6 ஆம்திகதிதிங்கட்கிழமைக்கு முன்னர் மாவட்ட அலுவலகம், 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல 12 கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம் உட்பட அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும். மேலதிக விபரங்களுக்கு 0212227949, 0710318737, 0776139307 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## எக்னெலிகொடவுக்கு நீதியைத் தாருங்கள்

*மனைவி சந்தியா கோரிக்கை*

கொழும்பு, ஜன. 3
சுயாதீன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவுக்கு நீதியைப் பெற்றுத் தரவேண்டும் என்று தற்போதைய அரசாங்கத்திடம் சந்தியா எக்னெலிகொட கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரகீத் எக்னெலிகொட வலிந்து காணாமலாக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் மற்றும் தற்போதைய நீதிமன்ற செயன்முறை ஆகியவற்றின்மீது தனக்கு முழுமையான நம்பிக்கை இருப்பதாகவும் சந்தியா எக்னெலிகொட கூறியுள்ளார்.

பிரகீத் எக்னெலிகொட முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்சவின் உத்தரவுக்கு அமைய கடத்தப்பட்டு பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று முன்னாள் கடற்படைச் சிப்பாய் என்று தன்னை வெளிப்படுத்திய நபரொருவர் அண்மையில் தெரிவித்திருந்தார்.


இதையடுத்தே எக்னெலிகொடவுக்கு நீதியைப் பெற்றுத் தரவேண்டும் என்று தற்போதைய அரசாங்கத்திடம் சந்தியா எக்னெலிகொடகோரிக்கைவிடுத்துள்ளார்.

பிரகீத் எக்னெலிகொட விவகாரத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் வழக்கு விசாரணை செயன்முறை மீது தனக்கு முழுமையான நம்பிக்கை இருப்பதனால், நீதி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் சந்தியா எக்னெலிகொட மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
15 . 05 . 1970

மறைவு
02 . 01 . 2025



மரியதாஸ் றொபேட் நியூமன்

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மரியதாஸ் றொபேட் நியூமன் அவர்கள் நேற்று (02.01.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்திநாதர் மரியதாஸ் மற்றும் - திரேசா புஸ்பம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பிரான்சிஸ் மற்றும் - திரேசா ஆகியோரின் மருமகனும், எமிலா சுவேந்தினி அவர்களின் பாசமிகு கணவரும், நிஜிதா, நிக்ஷிகா, நிதுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராஜன், ஜெயந்தன், ஜெசிக்கா, எட்மன், நியூட்டன், நீகன், றேமன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (03.01.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் சில்லாலை புனித கதிரை அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் சில்லாலை புனித கதிரை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய வெற்றிடங்கள்...

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே, வன்னி மாவட்டத்தில் நீண்டகாலமாக நிலவும் ஆசிரிய வெற்றிடங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் சில மாவட்டங்களில் ஆசிரியர்கள் அளவுக்கு அதிகமாக உள்ளனர். இன்னும் சில மாவட்டங்களில் ஆசிரியர்கள் இல்லை. வன்னியில், மிக முக்கியமான பாடங்களான கணிதப்பிரிவு, உயிரியல் பிரிவுகளுக்குக்கூட வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஆனால் யாழ்ப்பாணத்தில் கணிதப்பிரிவு ஆசிரியர்கள் 63 பேர் மேலதிகமாக இருக்கின்றனர் என்று தரவுகள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாணத்தில் மேலதிகமாகவுள்ள குறித்த கணிதப்பிரிவைச் சேர்ந்த 63 ஆசிரியர்களையும், ஏனைய நான்கு மாவட்டங்களிலும் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்கு நியமிக்காமைக்கான காரணம் என்ன?. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்ற ஆசிரியர் வெற்றிடங்கள் மற்றும் மேலதிகமாக உள்ள ஆசிரியர்களின் தரவுகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் குற்றச்சாட்டுத் தொடர்பில் வடமாகாணக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் வே. ஆயகுலன் கருத்துத் தெரிவிக்கையில்:

'புதிய ஆசிரிய நியமனங்களை வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கே வழங்கி வருகின்றோம். எனினும் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னர் ஆசிரியர் நியமனங்களைப் பெற்ற யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களின் வெளிமாவட்டச் சேவைக்காலமான எட்டு வருடங்கள் முடிவுற்றவுடன், ஆசிரியர்கள் தமது இடங்களுக்கு இடமாற்றம் கோரிச் செல்கின்றனர். இதனால்தான் யாழ்ப்பாணத்தில் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது.

இருப்பினும் வன்னி மாவட்டத்தில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது புதிதாக ஆசிரிய இடமாற்றங்கள் கோரப்படுகின்றபோது, இடமாற்றம் கோருகின்ற குறித்த ஆசிரியருக்கான வெற்றிடம் மீள் நிரப்பப்படாமல், இடமாற்றங்களை மேற்கொள்ளக் கூடாதென வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உத்தரவிட்டிருக்கின்றார். இந்த உத்தரவை வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்குத் தெளிவுபடுத்தியிருக்கின்றோம். விரைவில் இந்தப் பிரச்சினை சீரமைக்கப்படும்' - என்றார்.

(அ-ம-110-18-26)

## 2 வருடங்களின்...

ணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும் வந்துள்ளார். இந்த நிலையில் இரண்டு வருடங்களின் முன்னர் அவர் உயிரிழந்திருந்தார். அவரது சடலம் சென். பீற்றர்ஸ் தேவாலய சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது.

விபத்துத் தொடர்பான அவருடைய வழக்கு மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்துள்ளது. வழக்கொன்று நிலுவையில் உள்ளபோது, அந்த வழக்கோடு தொடர்புடையவர் உயிரிழந்ததை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுசென்ற பின்னரே சடலத்தை அடக்கம் செய்ய வேண்டும். ஆனால், வழக்கு இறுதியாக அழைக்கப்படும் வரையில் அவர் உயிரிழந்த விடயம் மன்னார் மாவட்ட நீதிமன்றத்துக்குத் தெரிவிக்கப்படவில்லை. இறுதித் தவணையின்போதே வழக்குடன் தொடர்புடையவர் உயிரிழந்துவிட்டார் என்ற விடயம் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

எனவே, உரிய நீதிமன்ற நடவடிக்கைகள் பின்பற்றப்படாததைத் தொடர்ந்து, சடலத்தைப் புதைத்த இடம் மல்லாகம் நீதிமன்றத்தின் நியாய ஆதிக்க எல்லைக்கு உட்பட்டதென்பதால் இதுகுறித்து மல்லாகம் நீதிமன்றத்துக்கு அறிவித்தல் வழங்கப்பட்டது. இதையடுத்தே, மல்லாகம் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அந்த நபரின் சடலம் இன்று தோண்டி எடுக்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்படவுள்ளது. மல்லாகம் நீதிமன்ற நீதிவான், சட்ட மருத்துவ அதிகாரி, தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட தரப்பினரின் முன்னிலையில் இன்று சடலம் மீளத் தோண்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## ஜனாதிபதி,..

வழங்கப்பட்டு வந்தது. எனினும், தற்போது எவருக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை என்பதால் ஜனாதிபதி மற்றும் பிரதமரைத் தவிர வேறு எவருக்கும் விசேட அதிரடிப்படையில் பாதுகாப்பு வழங்கப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-6)

## ஆசிரிய...

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதில், வவுனியா மாவட்டத்தில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் முன்வைத்த குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து, வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் திருமதி அன்ரன் யோகநாயகம் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் கருத்துகளை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். மிக விரைவில் ஆசிரிய சங்கங்களுடனும் கலந்துரையாடி இந்தப் பிரச்சினைக்கு ஒரு காத்திரமான முடிவு எடுக்கப்படும். ஏற்கனவே நிபந்தனையின் அடிப்படையில் வழங்கப்பட்ட இடமாற்றங்கள் தொடர்பிலும் தீர்மானங்களை மேற்கொண்டு, அனைத்து மாவட்டங்களும் பயன்பெறக்கூடிய வகையில் ஓர் இடமாற்றக் கொள்கையை வகுத்து அதற்கான அனுமதியைப் பெற்று அதை நடைமுறைப்படுத்துவோம். பிரதம செயலாளரின் தலைமையில் இதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். மூன்று மாதங்களில் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைப்போம் - என்றார்.

(அ-ம-110-18)

## ஆதாரமற்ற...

பாளரால் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறையில் உள்ள பொலிஸ் தகவல் தொழில்நுட்பப் பிரிவில் இது தொடர்பில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தைத் தொடர்ந்து இவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக பேஸ்புக் தளத்தை மையப்படுத்தி வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. இவ்வாறானதொரு பின்னணியிலேயே இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## அடாவடியில்...

கும் வீடியோ வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. அத்துடன், யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் அமைந்துள்ள தனியார் பேருந்துத் தரிப்பிடத்திலும் அந்தக் குழு அட்டகாசம் புரிந்துள்ளது. இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே, அரியாலை மற்றும் பொம்மைவெளிப் பகுதியைச் சேர்ந்த நான்கு பேர் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுத் துறையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் இது தொடர்பில் விரைந்து செயற்படுமாறு, பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்கவின் கவனத்துக்குக் கொண்டுவந்ததைத் தொடர்ந்து இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சிலர் தலைமறைவாகியுள்ள நிலையில், அவர்களைக் கைது செய்வதற்கு மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26-125)

## வவுனியாவில்...

இருவருக்கிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு மோதலாக மாறியதில் இந்தக் கத்திக்குத்துத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-18-110)

## படுகாயமடைந்த...

உயிரிழந்தார். அவருடைய பெற்றோரான வரதீஸ்வரன் கஜன் (வயது-40), கஜன் யாழினி (வயது-34) ஆகியோரும், சகோதரியான கஜன் இசைநிலா (வயது-6) என்ற சிறுமியும் காயமடைந்திருந்தனர். விபத்தில் உயிரிழந்த இரண்டு வயதுச் சிறுமியின் தாயாரான கஜன் யாழினி மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில், சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-9-66-113-26)

## காற்று...

தெரிவித்துள்ளது. இது தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்ததாவது:-

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் வளித்தரக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. நவம்பர் மாதம் 28ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் காற்றுமாசு நிலை (சுட்டெண்) அதிகளவில் ஏற்பட்டிருந்த நிலையில், டிசெம்பர் மாதம் 2ஆம் திகதிமுதல் நிலைமை மெல்லமெல்ல இயல்புக்குத் திரும்புகின்றது.

காற்றின் வடிவம் மாறி வீசுகின்றபோது (மாறுபட்ட சுழற்சி நிலை) அயல் நாடுகளில் இருந்து மாசுத் துணிக்கைகள் அதிகளவில் எடுத்து வரப்படுகின்றன. இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையே காற்றுமாசை அதிகப்படுத்தியிருந்த நிலையில், தற்போது நிலைமை கட்டுக்குள் வருகின்றது.

காற்றின் வழித்தரச் சுட்டெண் 50க்கு உட்பட்டதாக இருந்தால் அது ஆரோக்கியமான நிலையாகக் காணப்படும். 50 தொடக்கம் 100 வரை ஓரளவு பாதிப்பு நிலையாகவும், 100 தொடக்கம் 150 வரை கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள் மற்றும் சிறுவர்களைப் பாதிக்கும் நிலையாகவும் காணப்படும். இலங்கையில் இத்தகைய காற்றுமாசே ஏற்பட்டிருந்தது. காற்றுமாசு அதிகரிக்கின்றபோது, அதனை எதிர்கொண்டு மக்களை சுகாதார நிலையில் பேணிப் பாதுகாக்க சர்வதேச நிறுவனங்கள், தேசிய நிறுவனங்களுடன் இணைந்து நாம் பணியாற்றுகின்றோம். மேலும் வளியின் தரத்தைக் கண்காணிக்க வளித்தர உணரிகளை மையமாக வைத்து செயற்பாடுகளை மேற்கொள்கின்றோம் - என்றார்.

(அ-ம-125)

## இரு...

மோட்டார்சைக்கிளுடன் வீழ்ந்து இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

திருகோணமலை, இக்பால் நகர் பகுதியைச் சேர்ந்த அன்ரன் சாந்தன் (வயது -23), சசிகரன் சிம்புரதன் (வயது - 21) ஆகிய இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர். பாலத்தின் வழியாகப் பயணித்த பொதுமக்கள் துர்நாற்றம் வீசியதைத் தொடர்ந்து பாலத்துக்குள் பார்த்தபோதே சடலங்கள் இருப்பது அவதானிக்கப்பட்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது என்றும், இதையடுத்தே சடலங்கள் மீட்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞர்கள் இருவரைக் காணவில்லை என்று அவர்களின் உறவினர்களால் இரண்டு நாள்களுக்கு முன்னர் திருகோணமலைப் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது. எனவே, இளைஞர்கள் இருவரும் இரண்டு தினங்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

பரந்தன் பகுதியில் இருந்து திருகோணமலை நோக்கி பயணித்த மோட்டார்சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பாலத்துக்குள் வீழ்ந்ததிலேயே இந்த இறப்புகள் சம்பவித்துள்ளன என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சடலங்கள் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன், சம்பவ இடத்திலிருந்து 71 ஆயிரத்து 100 ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர். (அ-ம-113-28-26)

## எலிக்...

முழங்காவில் மற்றும் வடமராட்சி பகுதிகளைச் சேர்ந்த இருவரே உயிரிழந்துள்ளனர். அவர்களில் ஒருவருக்கு 50 வயது என்றும், மற்றையவருக்கு 24 வயது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இறப்புகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தியும் உறுதிப்படுத்தியுள்ளார். (அ-ம-26)

## கிணற்றிலிருந்து...

சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-66-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைப் பச்சையரிசியை வாங்குவதற்கு பின்னடிப்பு

கொழும்பு, ஜன.3

தம்புள்ளைச் சந்தைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள வெள்ளைப் பச்சையரிசி நுகர்வோர் மூலம் நிராகரிக்கப்படுவதால் அவற்றைக் கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளைப் பச்சையரிசியை வாங்கி வீட்டுக்குக் கொண்டுசெல்லும் நுகர்வோர் அவற்றை மீண்டும் கடைகளுக்கு வழங்குவதாக விற்பனையாளர்கள் கூறுகின்றனர். (ச-இ)

# மதம் எனும் போர்வையில் சிறுமிகள் துஷ்பிரயோகம்

## இலங்கைவாசிக்கு ஆஸியில் கடூழியம்

கொழும்பு, ஜன. 3

**பௌத்தத்தையும் கிறிஸ்தவத்தையும் இணைத்து ஒரு மதப்பிரிவை உருவாக்கி தன்னைக் கடவுள் போன்று காட்டி சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் வசிக்கும் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த தோல் மருத்துவர் ஒருவருக்கு பத்து வருடங்களும் பத்து மாதங்களும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.**

வின்ட்சர் நகரிலுள்ள மெல்பேர்ன் மெடிக்கல் ஸ்கின் கிளினிக்கின் நிறுவுநரான தோல் மருத்துவர் ஒருவர் 2016 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்து திரும்பியபின் பௌத்தத்தையும் கிறிஸ்தவத்தையும் இணைத்து ஒரு மதப்பிரிவை உருவாக்கி தன்னைக் கடவுள் போன்று காட்டிக்கொண்டுள்ளார்.

இந்த நிலையில் அவரது வழிபாட்டு முறையை ஏற்றுக் கொண்டவர்களின் சிறுமிகளைத் துஷ்பிரயோகம் செய்தார் என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. குறிப்பாக தனது சீடர்களின் உண்பது,உறங்குவது, குளிப்பது போன்ற சகல நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தியதுடன் வீடுகளுக்குள் நுழையும்போது முழந்தாளிட்டு வணங்கவேண்டுமென உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் கடவுளை மதிக்கக் கற்றுக்கொடுக்கவேண்டுமென்பதற்காகவே சிறுமிகளைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனவும் அவர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார். அதற்கமைய அவர் தனது குருட்டுத்தனமான செயற்பாடுகளுக்கு மதச்சாயம் பூசியுள்ளதாக நீதிமன்றம் தெரிவித்து கடூழியச் சிறை விதிக்கப்பட்டதுடன் இவரது மருத்துவத் தொழில் அனுமதிப்பத்திரத்தையும் நீதிமன்று ரத்துசெய்துள்ளது. (ச-25,6)

# நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வு!

கொழும்பு, ஜன.3

நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக கிரித்தலே மற்றும் கந்தளம ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக நீர்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது. அதிக மழையினால் ஆறு வருடங்களுக்குப் பின்னர் கிரித்தலே நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சிறுநீரகம் தேவை

47 வயதுடைய சிறுநீரக நோயாளி ஒருவருக்கு சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு AB+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை.

(CS29602) v-1

076 966 8214, 074 145 7983

# வாகன உதிரிப்பாக மோசடி; பொலிஸார் சுற்றிவளைப்பு

கொழும்பு, ஜன.3

மாத்தளை மற்றும் பிலியந்தலையில் வாகனங்களின் உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்து பொருத்தி விற்பனை செய்யும் விற்பனை நிலையங்கள் இரண்டை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த இரண்டு விற்பனை நிலையங்களிலுமிருந்து வாகனங்களின் செசிகள், இலக்கத்தகடுகள் போன்றவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர். பிலியந்தலையிலுள்ள விற்பனை நிலையத்தில் கைப்பற்றப்பட்ட வாகனங்களின் பெறுமதி 50 மில்லியனுக்கும் அதிகம் எனவும், இந்த விற்பனை நிலையம் தனியார் நிதி நிறுவனம் ஒன்றின் அனுசரணையுடன் இயங்கிவந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-45-6)

## மரண அறிவித்தல்



### வெலிச்சோர் ஜோசப்

(முன்னாள் லிகிதர்- புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் இராஜேந்திரா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வெலிச்சோர் ஜோசப் நேற்று (02.01.2025) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெலிச்சோர்-நேசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசையா-மர்த்தீனம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தங்கராணியின் அன்புக் கணவரும், ஜொணி சசிதரன் (ஆசிரியர்-உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), கிளனி வசிதரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கதிரொளி (ஆசிரியை- கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), கவிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜொய்டன், சைடன், கெய்டன், வெயினன், கெயினன் ஆகியோரின் பாசமிகு பேரனும், லீலா, காலஞ்சென்ற மலக்கியாஸ், சாண்டோ (ஜேர்மனி), பாமா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், போதகர் ஜெயசீலன், ஜெயராணி, காலஞ்சென்ற புஸ்பராணி, பத்மராணி, எஸ்தர்ராணி, இந்திராணி (ஜேர்மனி), அரியசீலன் (கொலண்ட்), அமிர்தராணி, காலஞ்சென்ற முடியப்பு மற்றும் யசிந்தா, ஜெயவதி (ஜேர்மனி), தெய்வேந்திரம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.01.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் யாழ் பேராலயத்திற்கு திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 2173) V-1

# இளைஞரின் சடலம் மீட்பு

யாழ்., டிசெ. 3

அல்வாய் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தூக்கிலிருந்து நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இறப்பு விசாரணைகளை கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் மேற்கொண்டார். (ம-100)

# சட்டவிரோத இறக்குமதி வாகனங்கள் மீட்பு

கொழும்பு, ஜன.3

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டு, போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி ஒன்றுசேர்க்கப்பட்ட ஜீப் ரக வாகனமொன்று பிங்வத்தை - பாடசாலை மாவத்தைப் பகுதியிலிருந்து நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

அதேவேளை இரத்மலானை தொடருந்து நிலையத்துக்கு அருகிலிருந்து இரண்டு லேண்ட் ரோவர் ரக வாகனங்களும் மீட்கப்பட்டுள்ளன. வலானை மத்திய ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் குறித்த வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன. (ச-இ)

# தாயும் மகளும் தாக்கி வயோதிபப்பெண் காயம்

சாவகச்சேரி, ஜன.3

தாயும் மகளும் சேர்ந்து தாக்கியதில் காயமடைந்த 53 வயதுடைய பெண் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் மட்டுவிலில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. இரவல் வாங்கிய தங்கநகையை கேட்கச் சென்ற பெண்ணைத் தாயும் மகளும் தாக்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.